**சுருக்கம்**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல் துறை – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் விதி எண்–110–இன் கீழ் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களை "தூய்மைப் பணியாளர்கள்" (Cleanliness Workers) என அழைப்பது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை**

**அரசாணை (நிலை) எண். 53** | **நாள்: 21.05.2020**

சார்வரி வருடம்,
வைகாசித் திங்கள்,
08 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு, 2051

**படிக்கப்பட்டவை:-**

1. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்ட மன்றப்பேரவையில் விதி எண்–110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு எண்.003, நாள் 19.03.2020.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.7057/ஜே.3/2020, நாள்.07.04.2020 மற்றும் 22.04.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரின் கடித ந.க.எண்.33644/2018/E.2, நாள்.20.04.2020

**ஆணை:-**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் விதி எண்–110–இன் கீழ் 19.03.2020–ஆம் நாளன்று உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் துப்புரவுப் பணியாளர்கள் தூய்மைப் பணிகளை செய்து வருகிறார்கள். இப்பணியாளர்களின் செயல்பாடுகளை கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடவும் அனைத்துப் துப்புரவுப் பணியாளர்களும் இனி "தூய்மைப் பணியாளர்கள்" (Cleanliness Workers) என்று அழைக்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர் தமிழ்நாட்டில் சென்னை மாநகராட்சியில் 6,398 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும், நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள 14 மாநகராட்சிகளில் 15,510 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும், 121 நகராட்சிகளில் 16,288 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும் மற்றும் பேரூராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள 528 பேரூராட்சிகளில் 6,450 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களும், ஆக மொத்தம் 44,646

**(த.பி.பா...)**

துப்புரவுப் பணியாளர் பணியிடங்கள் உள்ளன எனவும், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரின் கடிதத்தில், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள பல்வேறு கிராம ஊராட்சிகளில் மொத்தம் 26,404 துப்புரவுப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார். இப்பணியாளர்கள் பொது இடங்களில் தூய்மையை பேணிக் காப்பது, புயல், மழை போன்ற இயற்கைச் சீற்றங்களின் போது தூய்மைப் பணிகளை மேற்கொள்வது, தெருக்களில் சேரும் குப்பைகளை அகற்றி சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரம் பேணுவது மற்றும் பேருந்து நிலையம், சந்தைகள், ஆலயங்கள் மற்றும் வணிக வளாகப் பகுதிகளில் உள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை அகற்றி மேற்கொண்டு வரும் துப்புரவுப் பணிகள், மக்களின் நலனையும், பொது சுகாதாரத்தையும் பேணுவதில் முக்கியப் பங்கு வகிக்கிறது எனவும் தெரிவித்து, இப்பணியாளர்களின் செயல்பாடுகளை கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களால் சட்ட மன்றப் பேரவையில் விதி எண்–110–இன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் அடிப்படையிலும், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து துப்புரவுப் பணியாளர்களையும் "**தூய்மைப் பணியாளர்கள்**" (Cleanliness Workers) என அழைக்கப்படுவதற்கு உரிய ஆணை வெளியிடுமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் ஆகியோர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

3. மேற்காணும் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. அதனடிப்படையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் விதி எண்–110–இன் கீழ் அறிவிக்கப்பட்டவாறு, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளிலும் துப்புரவுப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் செயல்பாடுகளை கௌரவிக்கும் வகையிலும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், அனைத்துப் துப்புரவுப் பணியாளர்களும் இனி "தூய்மைப் பணியாளர்கள்" (Cleanliness Workers) என்று அழைக்கப்படுவார்கள் என அரசு ஆணையிடுகிறது.

4. மேற்படி, இப்பொருண்மை குறித்து நகராட்சிப் பணி விதிகள், பேரூராட்சிப் பணி விதிகள் மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சிப் பணி விதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்ள ஏதுவாக கருத்துருவினை உரிய வரைவு திருத்த அறிவிக்கையுடன் (Draft Amendment Notification) அரசுக்கு அனுப்புமாறு முறையே நகராட்சி நிர்வாக ஆணையர், பேரூராட்சிகளின் இயக்குநர் மற்றும் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஹர்மந்தர் சிங்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28.
பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை – 28.

**(த.பி.பா...)**

ஆணையாளர், சென்னை பெருநகர மாநகராட்சி, சென்னை–03.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி (ம)
ஊராட்சித் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
இயக்குநர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, பனகல் மாளிகை, சென்னை –15.

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை – 600 009.
மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்ட செயலாக்கம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–09.
பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–09.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.மு.1&2/
தேர்தல்கள்/பேரூ–1 /மா.ந–3,4,5 &6 ) துறை, சென்னை– 9.
இருப்பு கோப்பு / உபரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

பிரிவு அலுவலர்.